# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2018.09.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## கடன் இணக்கம் (திருத்தம்)

**(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகம், கடன் இணக்கச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலமும் கடன் இணக்கச் சபையின் தவிசாளரினதும் ஏனைய உறுப்பினர்களினதும் தெரிவுக்கான கட்டளைக் கற்களை மீளாய்வு செய்வதன் மூலமும் (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், கிளைச் சபைகளைத் தாபிப்பதற்கான தத்துவத்தை அமைச்சருக்குரித்தாக்குவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகம், கிளைச் சபைகளின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் நியமிப்பதற்கும் உறுப்பினர்கள் தொடர்பில் தகவுடைமைக் கட்டளைக் கற்களை மீளாய்வு செய்வதற்குமான தத்துவத்தை அமைச்சருக்குரித்தாக்குவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.*

ச.வ.- ஓ. 72/2017

**(81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கடன் இணக்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- (81 ஆம் அத்தியாயத்தின்) 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டியதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பத்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டியதும்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

''(2) சபையின் தவிசாளர் பின்வருபவராகவிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியாக அல்லது ஒரு மாவட்ட நீதிபதியாகப் பதவிவகிக்கின்ற அல்லது வகித்துள்ள ஆளொருவர்; அல்லது

(ஆ) ஒரு சட்டத்தரணியாகப் பதினைந்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவர்.'';

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) சபையின் ஏனைய ஒன்பது உறுப்பினர்கள் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு சட்டத்தரணியாகப் பத்தாண்டு களுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ளோர்; அல்லது

(ஆ) இலங்கை நிருவாக சேவையில் அல்லது ஒரு நாடு தழுவிய சேவையில் வகுப்பு I அலுவலரென்ற பதவியை வகிக்கின் றோர் அல்லது வகித்துள்ளோர்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "சபையானது காலத்துக்குக்காலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரானவர் காலத்துக்குக்காலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"கிளைச் சபைகளை அமைத்துரு வாக்குதல்.

8. (1) ஒவ்வொரு கிளைச் சபையும், ஒரு தவிசாளரையும், அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறாக நான்கை விஞ்சாதவர்களும் இரண்டுக்குக் குறையாதவர்களுமான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஏனைய உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கிளைச் சபையினதும் தவிசாளர், சபையின் உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்பதுடன்-

(அ) ஒரு மேல்நீதிமன்ற நீதிபதியாக அல்லது ஒரு மாவட்ட நீதிபதியாகப் பதவிவகிக்கின்ற அல்லது வகித்துள்ள ஆளொருவராகவிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) ஒரு சட்டத்தரணியாகப் பதினைந்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவராகவிருத்தலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு கிளைச் சபையினதும் ஏனைய உறுப்பினர்கள் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு சட்டத்தரணியாகப் பத்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ளோர்; அல்லது

(ஆ) இலங்கை நிருவாக சேவையில் அல்லது ஒரு நாடு தழுவிய சேவையில் வகுப்பு I அலுவலரென்ற பதவியை வகிக்கின்றோர் அல்லது வகித்துள்ளோர்.

(4) கிளைச் சபையின் எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும் -

(அ) கிளைச்சபையிலான தமது பதவியிலிருந்து விலகலாம்;

(ஆ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப் படலாம்.

(5) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள ஆளொருவர் தவிர்ந்தவரும் கிளைச் சபையொன்றின் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்றவருமான எவரேனுமாள் அதற்கு மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.".

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.